வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 27.12.2025 சனிக்கிழமை | இதழ் : 361 | பக்கங்கள் : 08

# இந்திய - சீன போட்டிக்குள் சிக்குண்டுள்ளது இலங்கை!

## இந்திய ஆய்வாளர் நாராயணன் சுவாமி



புதுடில்லி, டிசெ. 27

டித்வா சூறாவளியின் பின்னர், இந்தியா மற்றும் சீனாவின் அரசியல் போட்டிகளுக்குள் இலங்கை சிக்குண் டுள்ளதாக இந்தியாவின் சிரேஷ்ட பத்தி எழுத்தாளர் நாராயணன் சுவாமி தெரிவி த்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு எழுதி யுள்ள ஆய்வுக் கட்டுரை ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, டித்வா பேரிடர் மீட்பு நடவடிக்கையில், சீனாவை விட முன்னணியில் திகழவேண்டும் என்ற அடிப்படையில் இந்தியா முந்திக் கொண்டு இலங்கைக்கு உதவுவதற்கு முன்வந்ததாகவும் நாராயணன் சுவாமி கூறியுள்ளார்.

அதற்கமைய, தமது நிவாரண திட்டங்களை இரண்டு நாடுகளும் அறிவித்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பின்னணியில், இந்தியா மற்றும் சீனாவுடனான நெருங்கிய பிணைப்பை மிகச் சாமர்த்தியமாகக் கையாள வேண்டிய பொறுப்பு இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஏற்பட்டுள்ளதாகவும், இந்திய அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதன்படி, தென்னாசியாவின் மிக பலம் பொருந்திய இரண்டு வல்லரசுகளாக இந்தியாவும், சீனாவும் காணப்படுகின்றன.

இந்த இரண்டு நாடுகளும் தமது அண்டை நாடுகளுடன் அரசியல் பிணைப்புகளை வலுவாகப் பேணுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை

07

## தையிட்டி விகாரை காணி உரிமையை உறுதி செய்வதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 27

யாழ்.மாவட்டத்தில் காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையின் காணி உரிமையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், தேசிய ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக் குடன் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட

07

## தையிட்டியில் காணி இழந்தோருக்கு மாற்றுக் காணிகள் அல்லது இழப்பீடு

### கூறுகிறார் அமைச்சர் சந்திரசேகரன்

யாழ்ப்பாணம், டிசெ. 27


தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்த பொதுமக்களுக்கு மாற்றுக்காணிகளை பெற்றுக் கொடுப்பது அல்லது இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தையிட்டி திஸ்ஸ விகாரை தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்கிறோம். ஆனால் குறித்த விகாரை எமது

07

## டக்ளஸ் தேவானந்தா கைது!



கொழும்பு, டிசெ. 27

ஈ.பி.டிபியின் செயலாளர் நாயகம், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவாநன்தா நேற்று கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனித கொலை தொடர்பான விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுவந்த விசாரணையொன்று தொடர்பிலேயே இக்கைது இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் டக்ளஸ் தேவானந்தாவுக்கு "பிஸ்டல்" ரக துப்பாக்கியொன்று சட்டபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

07

## சிதைவுற்ற உள்ளங்களின் காயமாற்றுவது பேரிடரின் பின்னரான மீட்சியில் முக்கியம்!

### உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 27

பேரனர்த்தத்தின் பின்னரான மீட்சி என்பது சேதமடைந்த கட்டமைப்புக்களை மீளக்கட்டியெழுப்புவது மாத்திரமன்று. மாறாக சிதைவடைந்த உள்ளங்களின் காயத்தை ஆற்றுவதும், சமுதாய ரீதியான நலனை மீளுறுதிப்படுத்துவது மாகும் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தில் கொழும்பு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

"டித்வா" சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக் கணக்கானோர்

07

## ஒரேநாளில் ரூ. 6.1 கோடி வருமானம் ஈட்டிய அதிவேக நெடுஞ்சாலைகள்

கொழும்பு, டிசெ. 27

இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்து மூலம் ஒரே நாளில் 61 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் 170,000க்கும் அதிகமான வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியுள்ளன.

அதற்கு முந்தைய நாளிலும் (வியாழக்கிழமை) 170,069 வாகனங்கள் பயணித்திருந்ததுடன்,

07

## பொறுப்பற்ற தூதுவர்!

கொழும்பு, டிசெ. 27

இஸ்ரேலுக்கான இல ங்கைத் தூதுவர் நிமல் பண்டாரவுக்கு இஸ்ரே லில் வசிக்கும் இலங்கை யர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

வெளி விவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தலைமையில், இஸ்ரேலில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அங்குள்ள இலங்கையர்கள் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து, இதன்போது கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கையர்கள்,

07

## சிறீதரன் - அர்ச்சுனா எம்.பி.க்கள் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்!



யாழ்ப்பாணம், டிசெ. 27

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் இடையே யாழ்.

07

## இலங்கை நிச்சயம் மீண்டெழும்!

கொழும்பு, டிசெ. 27

"இலங்கையால் நிச்சயம் மீண்டெழ முடியும். அதற்கான தலைமைத்துவத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வழங்கும்." - என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



அரசாங்கம் மீது நம்பிக்கை இருப்பதாலேயே சர்வதேச உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன. இவ்வாறான உதவிகள்மூலம் இருந்த நிலையைவிடவும் சிறந்த நிலைக்கு வரமுடியும் எனவும் அவர்

07

## மதவாச்சி-மன்னார் ரயில் சேவை மூன்று வாரங்களில் ஆரம்பமாகும்

கொழும்பு, டிசெ. 27

மதவாச்சி - தலைமன்னார் இடையிலான ரயில் சேவை இன்னும் 3 வாரங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் சீர் செய்யப்பட்டு ரயில்வே திணைக்களத்தின் மார்க்கங்கள் மற்றும் பராமரிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, புத்தளம் ரயில் மார்க்கத்தில் சேதமடைந்த இரண்டு பாலங்களையும் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

07

## உடுவிலில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழில் கிணறு ஒன்றில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டது.

உடுவில் - மல்வம் பகுதியைச் சேர்ந்த ஞானசீலன் ரெஜித்டிலாஸ் (வயது 40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிர்மாய்த்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் இரவு மதுபோதையில் சென்று மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். அவர் இரவு வீட்டுக்கு

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்துறை நினைவாலயத்தில் நேற்று சுனாமி நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், டிசெ. 27

சுனாமி பேரழிவின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று காலை உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நடைபெற்றது. சுனாமி நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராம சேவையாளர் தோமஸ் யூட் மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைக்க, அதனை தொடர்ந்து வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் தங்கவேல் தங்கரூபன் உட்பட அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் தேசிய கொடியை மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏற்றியதை தொடர்ந்து, பொது ஈகச் சுடரினை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக தலைமை கிராம சேவகர் தோமஸ் யூட் ஏற்றிவைக்க சம நேரத்தில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தலில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களது உறவுகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், என பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ-05)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்குக!

## யாழ்.துணைத் தூதுவரிடம் கோரிக்கை




யாழ்ப்பாணம், டிசெ. 27

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக இந்திய துணைத் தூதுவரிடம் வலிறுத்தியதாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் தலைமையிலான குழுவினருக்கும் இந்திய துணைத் தூதுவருக்கும் இடையில் இந்திய துணைத் தூதரகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சந்திப்பில் இந்திய மீனவர்கள் மேற்கொண்டு வரும் அத்துமீறிய ட்றோலர் மீன்பிடி காரணமாக வடக்கு மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதனால் கடல் வளங்கள் அழிவடைவதும், மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படுவதும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த பாதிப்புகளுக்கான இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும், மீனவர் சமூகத்தை பாதுகாக்க வேண்டிய தேவைகள் குறித்தும் பேசப்பட்டது. அத்தோடு சமகால அரசியல் மற்றும் சமூக விடயங்களும் கலந்துரையாடப்பட்டன - என்றார்.

இந்த சந்திப்பில் மீனவர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ், கட்டைக்காடு பிரதேச சபை உறுப்பினர் அலஸ்ரன் (ரஜனி), தொண்டைமானாறு பிரதேசத்தைச் சேர்ந்த வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் றமேஸ், சுப்பர்மட பிரதேசத்தைச் சேர்ந்த பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் நிமல் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபையின் நாகர்கோவில் பிரதேச உறுப்பினர் குறிஞ்சி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# மன்னாரில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற சுனாமி நினைவு!



மன்னார், டிசெ. 27

சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மன்னார் பிரதான பாலத்தடியில் முன்னெடுக்கப்பட்டது.

கலங்கரை கலை இலக்கிய நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குநர் ஏ.ரி.மேகன்ராஜ் தலைமையில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

சுனாமியில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் நேற்று காலை 10.25 மணியளவில் குறித்த கடற்கரை பகுதியில் தீபம் ஏற்றி மலர் தூவி உயிர் நீத்தவர்களுக்காக உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப் பட்டது.


இதேவேளை சுனாமி பேரலை அனர்த்தம் ஏற்பட்டு 21 வது வருட நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று மன்னார் மாவட்ட செயலகத்திலும் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப் பணி ப்பாளர் கே.திலீபன் தலைமை யில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டு தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (அ)

# கிளிநொச்சி செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தினம்!



கிளிநொச்சி, டிசெ. 27

ஆழிப்பேரனர்த்தத்தின் 21ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு மற்றும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தேசியக்கொடி ஏற்றலுடன் சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களால் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபர், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# துயர் சுமந்த கரைகள் இறுவெட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 27

கட்டைக்காடு சென்.மேரிஸ் நாடக மன்றத்தால் துயர் சுமந்த கரைகள் என்னும் இறுவெட்டு நேற்று வெளியிடப்பட்டது

நாடு முழுவதும் ஆழிப் பேரலையின் 21ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் கட்டைக்காடு சென். மேரிஸ் சுனாமி நினைவாலயத்திலும் நினைவேந்தல் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் யெ. யெமிலின் வரிகளிலும் மைக்கல் சார்ள்ஸ் இசையில் பாடகர்களான யே.றெஜி, றா.விஜி, யோ.பிரியங்கா, செ. செபஸ்ரியன் ஆகியோரின் குரலில் பதிவாகிய துயர் சுமந்த கரைகள் என்னும் இறுவெட்டு வெளியிடப்பட்டது

கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் இறுவெட்டை வெளியிட்டு வைக்க ஆழிப்பேரையில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் பிரதிகளை பெற்றுக் கொண்டனர். (அ)



# சுனாமி நினைவு நிகழ்வு வவுனியாவில் அனுஷ்டிப்பு



வவுனியா, டிசெ. 27

சுனாமி பேரவலத்தின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

பூந்தோட்டத்தில் அமைந்துள்ள இலங்கையின் முதலாவது சுனாமி நினைவாலயத்தில் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் நினைவு நிகழ்வு இடபெற்றதுடன் டித்வா புயலில் பாதிக்கப்பட்டவர்களும் இதன்போது நினைவு கூறப்பட்டனர்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவினால் சுனாமி பேரவலத்தில் உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலி சுடர் ஏற்றப்பட்டதோடு டித்வா புயலினால் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி சுடரை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் ஏற்றி வைத்தார்.

இதனை அடுத்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதோடு நினைவுத்தூபிக்கு மலர் மாலை மற்றும் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ)

# சுனாமி நினைவு தினம் நேற்று கட்டைக்காடிலும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

சுனாமி பேரழிவின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் கட்டைக்காடு சென்மேரிஸ் கடற்தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கட்டைக்காடு சென்மேரிஸ் சுனாமி நினைவாலயத்தில் நேற்று காலை 9:30 மணியளவில் இடம்பெற்றது.

நினைவு தூபிக்கு மலர் மாலையை பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் பி.அலஸ்ரன் அணிவித்ததுடன் அஞ்சலி நிகழ்வை உயிரிழந்தவர்கள் சார்பாக உறவினர் ஒருவர் ஆரம்பித்து வைக்க அதனை தொடர்ந்து மலர் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து தேசிய கொடியை முள்ளியான் கிராம அலுவலர் ஏற்றியதை தொடர்ந்து பொது ஈகசுடரை உயிரிழந்தவர்கள் சார்பாக உறவினர் ஒருவர் ஏற்றிவைக்க சம நேரத்தில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



தொடர்ந்து அஞ்சலி உரையை கட்டைக்காடு கப்பலேந்திமாதா ஆலய பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் நிகழ்த்தினார்.

இந்த நினைவேந்தலில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களது உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 27.12.2023 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அரசியல் தற்துணிவு என்பது?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்தை பொறுப்பேற்று ஒரு வருடங்கள் முடிந்துவிட்டது. இந்த நிலையில் ஒரு பேரிடரால் மீளவும் கடன் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இலங்கை கடனிலிருந்து மீண்டு, அதற்கான சொந்தப் பாதையில் பயணிப்பது என்பது நடக்கும் காரியமல்ல. ரணில் விக்கிரமசிங்க 2048 இல், இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் திட்டங்கள் தொடர்பில் பேசினார். ஆனால் அவரால் ஆட்சியில் நீடிக்க முடியவில்லை. ரணிலின் நம்பிக்கையின் மீது சிங்கள மக்கள் நம்பிக்கை வைக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணயில் எவரும் - ஏன் ஜே.வி.பி கூட, எதிர்பாராத வகையில்தான், அரிய பெரும்பான்மை பலம் அவர்களுக்கு கிடைத்தது. இவ்வாறானதொரு அரிய வாய்ப்பு கிடைத்தபோது, ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதனைக் கொண்டு தனது அதிகாரத்தை வலுப்படுத்தியதுடன், நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையையும் மாற்றியமைத்தார். அதனால் இலங்கை பாரிய அரசியல் நெருக்கடிகளை சந்தித்தது. இந்தியாவின் நேரடியான தலையீடு நிகழ்ந்தது. தமிழ் ஆயுத இயக்கங்கள் இந்தியாவின் புவிசார் அரசியல் கருவிகளானது. இவ்வாறான தொடர் நெருக்கடிகளின் விளைவாக ஒரு கட்டத்தில் இந்தியாவுடன் ஒத்துப் போகும் முடிவை எடுக்கவேண்டிய நிர்பந்தம் ஜே.ஆருக்கு ஏற்பட்டது.

ஆனால் அன்றைய சூழலில், புவிசார் அரசியல் கருவியான தமிழர் அரசியலோ, தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான நன்மையை உறுதி செய்யவில்லை. இதற்கு வேறு எவரையும் குற்றம்சாட்டுவதை விடவும், தமிழ் தலைமைகளையே குற்றம்சாட்டவேண்டும். ஏனெனில் இந்தியா அதன் புவிசார் பிராந்திய நலன்களை அடிப்படையாகக் கொண்டு தலையீடுகளைச் செய்தாலும் கூட, தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்னும் எண்ணம் கொண்டிருந்தது உண்மை. ஆயுதப் போராட்டப் பாதையிலிருந்து, ஜனநாயகப் பாதைக்கு திரும்பிய அனைத்து இயக்கங்களின் தலைவர்களும் இந்த உண்மையை தெரியும். ஏனெனில் அவர்கள் இதனோடு நேரடியாகத் தொடர்புபட்டவர்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் அன்று இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள் இன்று பெரும்பான்மை பலத்தோடு இருக்கின்றனர். ஒன்றில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்றதை அவர்கள் மேலும் பலப்படுத்தி, தமிழ் மக்களுக்கு நியாயமானதொரு தீர்வை உறுதிப்படுத்தலாம் அல்லது புதியதொரு அரசியல் யாப்பின் மூலம் 13ஆவது திருத்தத்தில் உள்ளடங்கிவற்றை விடவும் மேலானதொரு தீர்வை உறுதிப்படுத்தலாம்.

ஆனால் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை எதிர்கொண்டு, தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவது என்பது இலகுவான காரியமல்ல - ஒரு வகையில் அது முயலில் கொம்பைத் தேடும் முயற்சி. ஆனால் இருப்பதை முழுமையாக அமுல்படுத்தி அதிலிருந்து முன்னோக்கி பயணிக்கும் வரலாற்றுக் கடமையை ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மேற்கொள்ள முடியும். அதற்கான அனைத்து சாதகமான அம்சங்களும் உண்டு. ஆனால் அதற்கான அரசியல் தற்துனிபு ஜே.வி.பியிடம் இருக்கின்றதா என்பதுதான் கேள்வி.

சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிந்திப்பதும் சவால்களை எதிர்கொண்டு முன்னோக்கிச் செல்வதுத்தான் ஒரு தலைமைக்கு இருக்க வேண்டிய அரசியல் தற்துனிபாகும். அவ்வாறானதொரு தற்துணிவு ஜனாதிபதி அனுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியிடம் இருக்கின்றதா? - இருந்தால் வரலாற்றுச் சாதனையை புரியலாம். இலங்கைத் தீவு புதியதொரு அரசியல் கலாசாரத்துக்கு முகம் கொடுக்கும்.

# ஒற்றையாட்சி முறை திணிக்கப்பட்டால் ஈழ போராட்டம் மீளப் புதுப்பிக்கப்படும்!

### அன்புமணி ராமதாஸ் கூறுகிறார்

சென்னை, டிசெ. 27

ஒற்றையாட்சி ஆட்சி முறையைத் திணிக்க இலங்கை அரசு எடுக்கும் எந்தவொரு முயற்சியும் புதுப்பிக்கப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு வழி வகுக்கும் என்று தமிழக கட்சி ஒன்று எச்சரித்துள்ளது.

எனவே, தமிழர்களுக்கு அர்த்தமுள்ள சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பு உறுதி செய்யப்படவேண்டும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளின் சில தலைவர்கள், ஒற்றையாட்சி முறையை வலுப்படுத்தும் நோக்கில் அரசியலமைப்புத் திருத்தங்களைத் திட்டமிட்டு வருகின்றனர்.

இது, சிங்கள பெரும்பான்மைவாதத்தை மேலும் ஊக்குவிக்கும் எனவும் அன்புமணி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இரண்டு தேசிய இனங்கள் வசிக்கும் நாட்டில் இது போன்ற நடவடிக்கைகள் ஆபத்தானவை மற்றும் கண்டிக்கத்தக்கவை என்று அவர் கூறியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நினைவு கூர்ந்துள்ள அன்புமணி, இந்த ஒப்பந்தம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பதன் மூலம் தமிழர்களுக்கு சுயாட்சியுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பைக் கருத்தில் கொண்டது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், இலங்கை இதைத் தொடர்ந்து செயல்படுத்த மறுத்து வருகிறது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம், தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்குப் பதிலாக, அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் குறைத்துவிட்டது என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இல்லாத நிலையிலும், தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மூல காரணங்கள் நீடிக்கின்றன.

இந்த நிலையில், சுயாட்சியை நிரந்தரமாக மறுக்கும் எந்தவொரு அரசியலமைப்பு மாற்றமும் ஈழத் தமிழர்களிடையே அடக்கப்பட்ட விடுதலை உணர்வுகளை மீண்டும் தூண்டிவிட்டு இலங்கையின் எதிர்காலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார். (அ)

# டித்வா பேரிடரினால் வீடுகளை இழந்தவர்கள் தாம் விரும்பும் மாவட்டத்தில் குடியேற அனுமதி

### ஒரு கோடி ரூபாய் நிதியுதவி

கொழும்பு, டிசெ. 27

டித்வா பேரிடரால் முழுமையாக வீடுகளையும், காணியையும் இழந்தவர்கள் தாம் விரும்பிய மாவட்டத்தில் குடியேற முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறு வேறு மாவட்டங்களில் குடியேற விரும்புபவர்களுக்கும், ஒரு கோடி ரூபாய் நிதியை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் என வீடமைப்பு அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

எனினும், உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, காணி கொள்வனவு மற்றும், வீடமைப்பு பணிகளைக் குறித்த பயனாளர் முன்னெடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நடைமுறைகள் தொடர்பான இற்றைப்படுத்தப்படும் தரவுகள், சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், பயனாளி தனக்கான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசாங்கத்தினால் 2026 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட வீடமைப்பு திட்டமும், பேரிடருக்குப் பின்னர் முன்னெடுக்கப்படத் திட்டமிடப்பட்ட வீடமைப்பு நடவடிக்கையும் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்படி, 2026 ஆம் ஆண்டு பாதீட்டு ஒதுக்கீட்டுக்கு அமைய 16,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.


அதில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டங்களும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மீள்குடியேற்ற திட்டத்திற்கான வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், பேரிடருக்குப் பின்னரான வீடமைப்புக்காக குறைநிரப்பு பிரேரணையில் 100 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வீடமைப்பு அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பேரிடரினால் வீடுகளை இழந்தவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான தகவல்கள் உரிய முறையில் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் அபிலாசைகளுக்கு அமைய வீடமைப்பு தொடர்பான தீர்மானங்கள் இறுதிப்படுத்தப்படும் எனவும் வீடமைப்பு அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். இனிமையான நாள்.

**இடபம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் ஆதாயமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததை போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக்கொண்டிருக்க வேண்டாம்.

**சிம்மம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும் விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் நன்மையும் எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியங்கள் முடியும். பழைய கடனைப் பற்றி யோசிப்பீர்கள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புது நட்பு மலரும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் அதிகமாகும். நீங்கள் எதைப் பேசினாலும் அதை எல்லோரும் தவறாக புரிந்து கொள்வார்கள்.

**மீனம்**
கணவன் மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பர செலவுகளால் சேமிப்பு கரையும். சகோதர வகையில் மனத்தாங்கல் வந்து நீங்கும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

### தையிட்டி திஸ்ஸ விகாரையால்

# காணிகளை இழந்தவர்களுக்கு மாற்றுக்காணி அல்லது இழப்பீடு

யாழ்ப்பாணம், டிசெ. 27

தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்த பொது மக்களுக்கு மாற்றுக் காணிகளை பெற்றுக் கொடுப்பது அல்லது இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

விகாரை விவகாரம் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி திஸ்ஸ விகாரையானது, தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்கிறோம். ஆனால், குறித்த விகாரை எமது ஆட்சிக் காலத்தில் அமைக்கப்படவில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால், அரசாங்கம் என்ற வகையில் இந்த பிரச்னையை நீடிக்காமல் முடிவுறுத்தவே எதிர்பார்க்கின்ற நிலையில், விகாரையால் காணிகளை இழந்த மக்களுக்கு உரிய மாற்றுக்காணிகளை வழங்குவது அல்லது தற்போதைய சூழ்நிலைக் கேற்ற அவர்களுக்கான இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இழப்பீடு அல்லது மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு கூட எத்தனை பேரிடம் ஆவணங்கள் சரியாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க குறித்த பிரச்னையை அரசியல் ரீதியாக மாற்றிக்கொண்டு செல்கிறார்கள்.

நாட்டின் மூவினங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மதம் மற்றும் இனங்களுக்கு



இடையில் மோதல்களை உருவாக்க முயற்சிக்கக் கூடாது.

எனவே, அரசாங்கம் திடமான ஒரு நிலைப்பாட்டில் இருக்கிறது. தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக்காணி வழங்கப்படும் என்று அமைச்சர் அவர் மேலும் தெரிவித்தார்.

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, டிசெ. 27

கிறிஸ்மஸ் தினத்தன்று வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், கிறிஸ்மஸ் தினத்தில் சர்வதேசத்துக்கு ஒரு செய்தியை கூறுவதாக தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் கருத்து தெரிவிக்கையில்,

கிறிஸ்துமஸ் தினத்தில் அனைத்து தமிழர்களிடமும் ஒரு பணிவான, ஆனால் தெளிவான வேண்டுகோளை வைக்கிறோம். எமது மண்ணிலுள்ள எமது உண்மையான வரலாற்றை கற்றுக்கொள்வோம். எமது இளம் தலைமுறைக்கு அதை கற்பிப்போம்.

எங்கள் குரல் எங்கள் அன்பான குழந்தைகள் திரும்பி வர வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. எதிர்காலத்தில் எந்த தமிழ் குழந்தையும் இதே துயரை அனுபவிக்கக் கூடாது என்பதற்காகவும்.



நாங்கள் தினமும் துக்கத்துடன் மட்டுமல்ல, உறுதியுடனும் கூடுகிறோம். நீதி கோருவதற்காகவும், தமிழ் இறையாண்மைக்கு சர்வதேச ஆதரவை கோருவதற்காகவும், எதிர்கால இன அழிப்பு மற்றும் அழிவுகளிலிருந்து எமது மக்களை பாதுகாப்பதற்காகவும் நாங்கள் இங்கு நிற்கிறோம்.

இந்த கிறிஸ்துமஸ் தினத்தில், தெளிவாகக் கூறுகிறோம். எங்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம். எங்களுக்கு கூட்டாட்சித் தீர்வுகள் வேண்டாம். எங்களுக்கு ஒற்றை, அல்லது மேலோட்ட அரசியல் தீர்வுகள் வேண்டாம்.

எங்களுக்கு வேண்டியது தமிழ் இறையாண்மையின் மீட்பு.

எமது வரலாற்றை எமது பிள்ளைகளுக்குக் கற்பிப்போம். சட்டபூர்வமான மற்றும் நியாயமான வழிகளில் நீதி தேடுவோம். எமது நிலத்தை அதன் உண்மையான உரிமையாளர்களான தமிழர்களிடம் மீண்டும் கொண்டு வருவோம்.

உண்மை அழிக்கப்படக் கூடாது.

நீதி தாமதிக்கப்படக் கூடாது.

தமிழ் தாயகம் மறுக்கப்படக் கூடாது.- என்றார். (எ-10)

# அர்ச்சுனா எம். பிக்கு கொலை மிரட்டல்! அலுவலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

வலிகாமம் பிரதேச சபை உறுப்பினர்கள் நால்வர் உட்பட பலர் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை தொலைபேசியில் அழைத்து கொலை மிரட்டல் விடுத்ததாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, காங்கசந்துராயா சாலை, மல்லாகம் என்ற முகவரியில் ஒரு கட்சி அலுவலகத்தை நடத்தி வருகிறார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் மீசாலை வடக்கு, கொடிகாமம் பகுதியில் நிரந்தரமாக வசிப்பவர் என்றும் பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில், அர்ச்சுனா எம். பிக்கு கொலை மிரட்டல் விடுக் கப்பட்டுள்ளது.

இதனால், அவ ரது அலுவலகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

27 டிசெம்பர் 2025 சனிக்கிழமை 

# டிப்பர் - பேருந்து விபத்து 30 பேருக்கு காயங்கள்!



கொழும்பு, டிசெ. 27

டிப்பர் வாகனமும் பேருந்தும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 30 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

அம்பாந்தோட்டை - வீரகெட்டியவிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த தனியார் பேருந்தும் பெலியத்தை நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகின.

அம்பாந்தோட்டை - ஹதபாங்கொடல்லை பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், 30 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்தவர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பெலியத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் 691 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 27

முழு நாடுமே ஒன்றாக தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், பொலிஸ் மா போதைப் பொருட்களுடன் 691 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையில் 158 கிராம் ஹெரோயின், 531 கிராம் ஐஸ், 4 கிலோ 919 கிராம் கஞ்சா, 15 ஆயிரத்து 794 கஞ்சா செடிகள், 11 கிராம் குஷ்ரக போதைப் பொருள், 56 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 210 போதை மாத்திரைகள், 35 கிராம் 130 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 124 கிராம் மாவா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேநேரம், போதைப்பொருட்களுடன் 691 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில், 13 பேர் தடுப்பு காவல் உத்தரவு பெற்றவர்கள். இருவர் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)

# கிராம உத்தியோகத்தரை மிரட்டிய தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கைது

சிலாபம், டிசெ. 27

கிராம உத்தியோகத்தரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி நிவாரண பொருட்களுடன் தான் பயணித்த சிறிய லொறியுடன் பிரதேச சபை உறுப்பினர் மோதுண்டாரெனவும் இதன் போது அவர் தன்னைத் திட்டினார் என்றும் இது தொடர்பில் பிரதேச செயலருக்கு தான் தெரியப்படுத்தினார் எனவும் கிராம உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கடந்த 8ஆம் திகதி தனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து பிரதேச சபை உறுப்பினர் மிரட்டினார் என்றும் கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்தே முந்தலமை பொலிஸாரால் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டார். (ஐ)

# முகாமையாளர் படுகொலை 6 சந்தேகநபர்கள் கைதாகினர்

கொழும்பு, டிசெ. 27

அம்பலாங்கொடையில் வர்த்தக நிலைய முகாமையாளர் படுகொலை சம்பவம் தொடர்பில் 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ரிவால்வர், பிஸ்டல் ரக கைத்துப்பாக்கிகள் 2 கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கிரிபத்கொடையில் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# குடும்ப பெண் மர்ம மரணம்!

கொழும்பு, டிசெ. 27

சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நிலையில் பெண்ணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் அநுராதபுரம் - மிகிந்தலை - புதுக்குளத்தில் மீட்கப்பட்ட இந்தச் சடலத்துக்கு உரியவர் அதே இடத்தைச் சேர்ந்த 58 வயதுடையவர் என்று அறிய வந்தது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மிகிந்தலை பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஹக்கல தேசிய தாவரவியல் பூங்கா மீண்டும் திறக்கப்பட்டது

கொழும்பு, டிசெ. 27

பேரிடரால் பாதிக்கப்பட்ட நுவரெலியா மாவட்டத்தில் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர். இந்த நிலையில், பேரிடரால் மூடப்பட்டிருந்த ஹக்கல தேசிய தாவரவியல் பூங்கா நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்தப் பூங்கா திறக்கப்பட்டது.

நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் மண்சரிவு அபாயம் அவதானிக்கப்பட்ட நுழைவாயிலுக்கு அருகிலுள்ள குளம் மற்றும் வனப் பூங்காவுக்கு செல்லும் பாதைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மேலும் பூங்கா உள் பகுதியில் நிலத்தில் வெடிப்புகள், நிலத்தாழிறக்கம், நிலத்தில் குழிகள் ஏற்படுதல், மரங்கள் செடிகொடிகள் சாய்தல் மற்றும் புதிய நீரூற்றுக்கள் உருவாகுதல் போன்றவை தொடர்ந்து அவதானிக்கப்படுகின்றன.

அத்துடன் சுற்றுலா பயணிகள் தடை செய்யப்பட்ட பகுதிகளுக்குள் நுழைவதைத் தவிர்க்க எச்சரிக்கை பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# வெவ்வேறு விபத்துகளில் சிறுமி உட்பட மூவர் பலி!

கொழும்பு, டிசெ. 27

நாட்டில் வெவ்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் சிறுமி உட்பட மூவர் உயிரிழந்தனர்.

களுத்துறை - ஹொரணை - ஹொரகெட்டியில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பாறையுடன் மோதியதில் 22 வயது இளைஞர் உயிரிழந்தார்.

இதேவேளை, களுத்துறை - வெலிப்பனை இடம்பெற்ற விபத்தில் 3 வயது சிறுமி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

இதேநேரம், யாழ்ப்பாணம் - தென்மராட்சி - புத்தூர் - மீசாலை வீதிக்கு அண்மையாக இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றது. இதில், சைக்கிளில் சென்ற மட்டுவிலை சேர்ந்த 75 வயது முதியவர் உயிரிழந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியில் 5 கிராமங்கள் மனிதவாழ்வுக்கு பாதுகாப்பற்ற வலயங்களாக அறிவிப்பு

கண்டி, டிசெ. 27

"டித்வா" சூறாவளியால் ஏற்பட்ட கடும் மண்சரிவுகளைத் தொடர்ந்து கண்டி மாவட்டத்தில் ஹசலக்க நகரத்தை அண்டியுள்ள பமுனுபுர பகுதியில் உள்ள ஐந்து கிராமங்களை உடன் அமுலுக்கு வரும் வகையில் மனித வாழ்வுக்கு பாதுகாப்பற்ற வலயங்களாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் உதவிப் பணிப்பாளர் கே. ரணவீர தெரிவிக்கையில்,இந்த பகுதிகளில் பெரிய அளவிலான நிலப்பகுதிகள் கிட்டத்தட்ட 40 அடி ஆழத்துக்கு புதையுண்டுள்ளமையால் அங்குள்ள கிராமங்கள் மனித வாழ்வுக்குப் பாதுகாப்பற்றதாக மாறியதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி உடத்தாவ, நெலும் மாலா, காலா நாகா, மட கெலே மற்றும் உட கல் தெபோக்கவ ஆகிய ஆகிய ஐந்து கிராமங்கள் இவ்வாறு மனிதர்கள் வசிப்பதற்கு பொருத்தமற்றவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடத்தாவ கிராமத்தில் 12 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்சரிவில் முற்று முழுதாக புதைந்துவிட்டது. அங்கு இது வரை 26 குடியிருப்பாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.

எனினும், இடிபாடுகளுக்கு அடியில் 30 முதல் 40 அடி ஆழத்தில் பல உடல்கள் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதால், காணாமல் போனவர்களின் சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியவில்லை.

பாதுகாப்பு காரணங்களுக்காக பாதிக்கப்பட்ட கிராமங்களில் அகழ்வாராய்ச்சி மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆசிரிய கருணாவர்த்தன கூறுகையில்,

மண்சரிவு அபாயம் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற அனுமதிக்கப்பட மாட்டாது. விரிவான மதிப்பீடுகளைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட வலயங்களிலிருந்து குடியிருப்பாளர்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் மண்சரிவு அபாயங்களை மதிப்பிடுவதற்காக மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் துணையுடன் நில அடையாளத் திட்டம் தற்போது நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் பீடத்தின் மூத்த பேராசிரியர் ரங்கிகா ஹல்வதுரா தலைமையில் முன்னெடுக்கப்படும் கணக்கெடுப்பு, யஹங்கல மலை மற்றும் ஹசலக்க உகத்தாவ மற்றும் நெலும் மல உட்பட சுற்றியுள்ள கிராமங்களின் சுமார் 10 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது.

யஹங்கல மலையில் இரசாயன பயன்பாடு மற்றும் துளையிடப்பட்ட அறிகுறிகள் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இது சட்டவிரோத புதையல் மற்றும் வேட்டையாடுதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்பதோடு, இந்த செயல்பாடுகள் மலையின் அமைப்பை பலவீனப்படுத்தியிருக்கலாம். இதுபோன்ற நடவடிக்கைகளால் ஏற்படும் வலுவான அதிர்ச்சி அலைகள் மண் சரிவுக்கு பங்களிப்பு செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மினிப்பே பிரதேச செயலாளரின் வேண்டுகோளின் பேரில் நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பு, எதிர்கால அனர்த்த தடுப்புக்கு மிக முக்கியமானதாக இருக்கும் எனவும், அறிக்கை ஏற்கனவே பிரதேச செயலாளரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் ஹல்வதுர தெரிவித்தார்.

(எ)

# சுனாமி பேபி இல்லத்தில் நேற்று உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி




மட்டக்களப்பு, டிசெ. 27

சுனாமி பேபியின் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத்தூபியில் அவரது பெற்றோர் அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு, குருக்கள் மடத்தில் அமைந்துள்ள சுனாமி பேபி அபிலாஷின் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத்தூபியில் -ஆழிப்பேரலையால் உயிர் நீத்த உறவுகளுக்காக அபிலாஷின் பெற்றோர் நேற்றுக்காலை அஞ்சலி செலுத்தினர்.

தற்போது 21 வயதில் சுனாமி பேபி 81 என அறியப்படும் ஜெயராசா அபிலாஷ் தனது உயர் படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளார். இந்த நிலையில், அவரது இல்லத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத் தூபியில் அவரது பெற்றார் சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (எ)

# காரைதீவு கடற்கரையில் சுனாமி நினைவேந்தல்



காரைதீவு, டிசெ. 27

21ஆவது வருட சுனாமி தின ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை அம்பாறை, காரைதீவு கடற்கரையில் நடைபெற்றது.

காரைதீவில் 2004 ஆம் ஆண்டு சுனாமியில் உயிர்நீத்த 867 பேரை நினைவுகூர்ந்து வருடா வருடம் காரைதீவு கடற்கரையில் றிமைன்டர் விளையாட்டு கழகத்தினரால் நிறுவப்பட்ட நினைவுத்தூபி முன்றலில் பொதுவான அஞ்சலி நிகழ்வு நடைபெறுவது வழக்கம்.

இந்த நிகழ்வு இம்முறையும் நேற்று காலை இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆத்மார்த்த சுனாமி ஒளி தீபம் ஏற்றியதோடு அஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இடர் தீர்க்கும் பதிகமும் ஆன்மீக அதிதி சிவசிறி சண்முக மகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இதில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(எ-07)

# காட்டு யானை உயிரிழப்பு!

கல்முனை, டிசெ. 27

காட்டு யானை ஒன்று உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆஸ்பத்திரி சேனை கண்டம் வயல் பகுதியில் காட்டு யானை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

குறித்த காட்டு யானை உட்பட சில யானைகள் அப்பகுதிகளில் நடமாடி திரிந்ததை அவதானித்ததாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்ட நிலையில் யானையின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் காரணத்தை அறிவதற்காக குறித்த இடத்துக்கு வருகைதந்த அதிகாரிகள் யானையின் உடலை மீட்டதுடன் யானை உயிரிழந்தமைக்கான காரணம் பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளன.(எ)

# சீமெந்து ஏற்றிச்சென்ற வாகனம் 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து

ஹற்றன், டிசெ. 27

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனை, கடவல பகுதியில் சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹற்றனில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

குறித்த பகுதியில் உள்ள வளைவு ஒன்றில் திரும்புகையில், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி, கனரக வாகனம் பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் சாரதிக்கோ அல்லது வேறு எவருக்கோ காயங்களோ, உயிரிழப்புகளோ ஏற்படவில்லை. இருப்பினும், வாகனத்துக்கும் அதில் கொண்டு செல்லப்பட்ட சீமெந்து மூடைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# நீரில் தவறி விழுந்து மூழ்கிய குடும்பஸ்தர் உயிரிழந்தார்!

நிந்தவூர், டிசெ. 27

விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் ஓடும் நீரில் தவறி விழுந்து மூழ்கிய குடும்பஸ்தரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உள்ளாற்றுக்கட்டு பகுதியில் விவசாய நடவடிக் கைக்காக சென்ற நிலையில் அப்பகுதியில் உள்ள பாலத்தி லிருந்து தவறி விழுந்து விவசாயியான குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் துவிச்சக்கர வண்டியில் பசளை ஏற்றிக் கொண்டு வயலுக்குச் செல்லும் வழியில் பாலத்தின் ஊடாக பயணித்த போது தவறுதலாக ஆற்றில் பசளை விழுந்ததாகவும் அதனை மீட்டெடுக்க அதிக நீரோட்டம் கொண்ட ஆற்றுக்குள் இறங்கிய நிலையில், நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

(எ)

# நுகர்வோர் அதிகார சபையால் மாணவர்களுக்கு விழிப்புணர்வு

கல்முனை, டிசெ. 27

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் கல்முனை ஸாஹிரா கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வர்த்தக- வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அம்பாறை மாவட்ட செயலக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் பாடசாலை உயர்தரப் பிரிவு மாணவர்கள் மத்தியில் நுகர்வோர் அதிகார சபையால் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன்போது நுகர்வோர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்கு விளக்கக்காட்சி ஊடாக தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர் முஹம்மட் ஸாஜித் ஸமான் மற்றும் எம். காமில் ஆகியோர் கலந்து கொண்டார். மேலும் உயர்தர பிரிவு, வர்த்தக பிரிவு ஆசிரியார்களும் கலந்து கொண்டனர்.

(எ-01)

சுனாமி நினைவு தினம்

# மட்டு. ஓந்தாச்சிமடத்தில் கண்ணீர் மல்க அஞ்சலி



மட்டக்களப்பு, டிசெ. 17

சுனாமி தாக்கி நேற்றுடன் 21 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை நினைவு கூர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிலையில், ஒந்தாச்சிமடம் கிராமத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத் தூபியில் உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றி, மலர்தூபி உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டக்ளஸ்...

பாதாளக் குழு உறுப்பினர் வெளியிட்ட தகவலுக் கமைய 2019 ஆம் ஆண்டு வெலிவேரிய பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை களின் அடிப்படையிலேயே டக்ளஸ் தேவானந்த கைது செய்யப்பட்டுள்ளார். அவரை கம்பகா நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு சி.ஐ.டியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## இந்திய...

இந்தியாவும், சீனாவும் காணப்படுகின்றன.

இந்த இரண்டு நாடுகளும் தமது அண்டை நாடுக ளுடன் அரசியல் பிணைப்புகளை வலுவாகப் பேணு வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை முன் நகர்த்திச் செல்கின்றன.

இவ்வாறான பின்புலத்தில், டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரிடரிலிருந்து இலங்கையை மீட்பதற்காக உடனடியாக இந்தியா களத்தில் இறங்கியது. இந்திய வான்படைகளின் வானூர்திகள் மீட்பு மற்றும் நிவா ரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. இந்திய இராணுவம் மற்றும் கடற்படையின் உதவியுடன் மனி தாபிமான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

அதுமாத்திரமன்றி, பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் கடந்த திங்கட்கிழமை இலங் கைக்கு சென்றார்.

இதன்போது இலங்கையின் மீளக் கட்டியெழுப்பல் செயற்பாடுகளுக்காக 450 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை இந்தியா வழங்குவதாகவும் அறிவித்தார்.

இந்தநிலையில், பேரிடரின் போது, சீனாவும் தமது முழுமையான ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கியது. நிவாரணப் பொருட்களை அனுப்பியதுடன், மீட்புப் பணியாளர்களையும் தொடர்ச்சியாக அனுப்பியது. அத்துடன் மில்லியன் கணக்கான நிவாரண நிதியையும் சீனா வழங்கியுள்ளது.

இந்த இரண்டு நாடுகளின் அரசியல் இருப்புக்கான போட்டியில், இலங்கைக்கான மனிதாபிமான உதவிகள் வலுவாகக் கிடைத்துள்ளதாக இந்திய அரசியல் ஆய்வா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பின்புலத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண உதவிகளை விட, அரசியல் தீர்வே அவசியம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்புடன் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி, மாகாண சபைக்கான அதிகாரத்தை வழங்க வேண்டும் என தமிழ்த் தரப்புகள் கோரிக்கை விடுக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் தமிழக அரசியல் தலை வர்களை, இலங்கையின் தமிழ்த் தரப்பினர் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

அத்துடன், இலங்கையில் மாகாண சபை முறையை அமுல்படுத்த இந்தியா முழுமையான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள் ளது.

இந்த நிலையில், தமிழர்களின் கோரிக்கை தொடர் பில் சாதகமாக பரிசீலனை செய்து, உரிய தீர்வை பெற்றுக்கொடுக்கத் தவறும் பட்சத்தில், நாட்டில் மற்று மொரு விடுதலை போராட்டம் ஏற்படக்கூடும் என தமிழக அரசியல் கட்சிகள் எச்சரித்துள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது. (அ)

## தையிட்டி

குழுவொன் றின் நடவடிக்கைகளால் இந்தப் பணிகள் பாதிக் கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் காமகெதர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த காணி உரிமை தொடர்பான நீண்டகால பிரச்னையை தீர்க்க நில அமைச்சுடன் இணைந்து அமைச்சு செயல்பட்டு வருவதாகவும், திட்டமிட்ட முறையில் மோதலை உருவாக்க முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பின்னணியில், கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி தையிட்டி கிராம சேவகர் பிரிவில் உள்ள விகாரைக்கு முன்பாக சட்டவிரோத போராட்டத்தில் ஈடுபட்டதாக ஐந்து பேர் பலாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தலா ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளதுடன், ஜனவரி மாதம் 26ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் உள்ளிட்ட குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், விகாரை அமைந்துள்ள காணிகளை பொதுமக்களிடம் மீள ஒப்படைக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

போராட்டக்காரர்கள் விகாரை வளாகத்துக்குள் பலவந்தமாக நுழைய முயன்றபோது மோதல் ஏற்பட் டுள்ளது. இதற்கு முன்னரும், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம், குறித்த விகாரையை சட்டவிரோத கட்டடம் எனக் குறிப்பிட்டு அதை அகற்றுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (அ)

# அனர்த்தத்தில் மறைந்தவர்களை நினைவு கூர்ந்த நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 27

ஆழிப்பேரலை ஏற்பட்டு 21 ஆண்டுகள் நிறைவான நேற்று குறித்த பேரழிவில் உயிரிழந்த மக்கள் மற்றும் அண்மையில் ஏற்ப ட்ட டித்வா சூறாவளி அனர்த்தத்தி னால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில், தனது குடும்ப உறுப் பினர்களுடன் இணைந்து இந்த அனர்த்தங்களில் உயிரிழந்தவர் களை நினைவு கூர்ந்து அவர் இந்த வழிபாடுகளை முன்னெடுத்தார்.

சமய வழிபாடுகளின் பின்னர், நாமல் தனது சமூக வலைத்தள பக்கத்தில் "நாட்டையே உலுக்கிய ஆழிப்பேரலை ஏற்பட்டு 21 ஆண் டுகள் நிறைவடையும் இன்றைய நாளில், அந்த அனர்த்தத்தினால் எம்மிடமிருந்து விடைபெற்று சென்ற அன்பிற்குரிய மக்களை மிகுந்த சோகத்துடன் நினைவு கூர்ந்தேன்.

அதேபோல், அண்மைய அனர்த்த நிலைமைகள் காரணமாக உயிரிழந்த மக்களையும் மனவே தனையுடன் நினைவு கூர்ந்தேன்" என குறிப்பிட்டார்.

அத்துடன் "இயற்கைச் சீற்றங் களுக்கு மத்தியில் நாம் ஒரு தேசமாக மீண்டும் எழுந்து நின்றோம். எத்தனை தடைகள் ஏற்பட்டாலும், பாரிய அபிவிருத் திகள் ஊடாக இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பினோம். இனிவரும் காலங்களில் இத்தகைய பேரழிவுகள் மீண்டும் ஏற்படக் கூடாது எனப் பிரார்த்திக்கின்றேன்!" என அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் கூறியுள்ளார். (அ)

## தையிட்டியில்...

ஆட்சிக் காலத்தில் அமைக்கப்படவில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் அரசாங்கம் என்ற வகையில் குறித்த பிரச் னையை நீடிக்காமல் முடிவுறுத்தவே எதிர்பார்க்கின்ற நிலையில் விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு உரிய மாற்றுக் காணிகளை வழங்குவது அல்லது தற்போதைய சூழ்நிலைக் கேற்ற அவர்களுக் கான இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இழப்பீடு அல்லது மாற்றுக்காணிகளை வழங்கு வதற்கு கூட எத்தனை பேரிடம் ஆவணங்கள் சரியாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க குறித்த பிரச்னையை அரசியல் ரீதியாக மாற்றிக்கொண்டு செல்கிறார்கள்.

நாட்டின் மூவினங்களும் ஒற்றுமையாக வாழவேண் டும் என்ற நிலைப்பாட்டில் எமது அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மதம் மற்றும் இனங்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்க முயற்சிக்கக்கூடாது.

ஆகவே அரசாங்கம் திடமான ஒரு நிலைப்பாட்டில் இருக்கிறது. தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக காணி களை இழந்த மக்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக் காணியே தீர்வு-என்றார். (அ)

## சிறீதரன்...

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கான சுற்றறிக்கை தொடர்பான விவாதத்தின்போது இவ்வாறு வாக்குவாதம் ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கருத்து தெரிவிக்கும்போது, பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் குறுக்கிட்டார். இதன்போது குட்டி நாயை போன்று குரைத்துக்கொண்டு இருக்கக்கூடாது என சிறீதரன் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, ஒரு பாராளும ன்ற உறுப்பினரான இளங்குமரனை பார்த்து எவ்வாறு நாய் என சிறீதரன் கூறமுடியும்? என கேள்வி எழுப்பினார்.

படிப்பறிவு இருக்கவேண்டும், கைநாட்டு அரசி யலை செய்யும் தமிழரசுக் கட்சியின் அரசியல்வாதி களுக்கு இவ்வாறான செயற்பாடுகள் தெரிவதில்லை என அவர் விமர்சித்திருந்தார்.

இதன்போது கடும் தொனியில் சிறீதரன் எம்.பி, உனக்கு படிப்பறிவு இருக்கிறதா? நாங்கள் கைநாட்டு என்றால் நீ கால்நாட்டா என கூறினார். இதன்போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது. (அ-05)

## மதவாச்சி...

அந்த புனரமைப்பு பணிகள் நிறைவடைந்தவுடன் அந்த சேவை நாத்தாண்டியா வரை விஸ்தரிக்கப்படும்

அனர்த்தங்கள் காரணமாக மலையகத்துக்கான ரயில் சேவைகளே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன் புனரமைப்பு பணிகள் பல கட்டங்களாக பிரிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது.

இதற்கமைய, ரம்புக்கனை, கடுகண்ணாவ, கம்பளை, நாவலப்பிட்டி, கொட்டலை, அம்பேவெல ஆகிய ரயில் நிலையங்களின் புனரமைப்புப் பணிகள் முன்னெ டுக்கப்படுகின்றன.

கண்டி - மாத்தளை ரயில் மார்க்கத்திலும் சேதமடை ந்த பகுதிகளை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ரயில்வே பணியாளர்கள், இராணுவத்தினரின் முயற்சியில் இந்த பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மார்க்கத்துக்கான ரயில் சேவைகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## இலங்கை...

கூறினார். அதேவேளை, ஊடக அடக்குமுறை தொடர்பில் அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட் டுவரும் குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்தார். (அ)

## உடுவில்...

வரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் அவரை நேற்று காலை தேடியவேளை வீட்டின் அருகேயுள்ள காணி கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் குறித்த கிணற்று கட்டு மீது அமர்ந்திருந்து இதற்கு முன்னரும் மதுபானம் அருந்துவது வழமை என்றும், அவ்வாறு நேற்று முன் தினம் இரவு போதையில் இருந்து மதுபானம் அருந்தியவேளை கிணற்றில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சுன்னாகம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலி ஸார் ஆகியோரும் விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர். (அ-05)

## சிதைவுற்ற...

தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலை யில் சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பல வழிகளிலும் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர்.

அந்தவகையில் கொழும்பிலுள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் கிளை அலுவலகமானது பேரனர்த்தத் தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு, கண்டி மாவட்டத்திலுள்ள பொதுச்சுகாதார ஊழியர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் அவசியமான பயிற்சிகளை வழங்கியுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் இலங்கை சமுதாய மருத்துவக் குழுமத்தினால் முன்னெ டுக்கப்பட்ட இப்பயிற்சி வழங்கலில் பொதுச் சுகாதார ஊழியர்கள் அக்கறையுடனும், உணர்திறனுடனும், இரக்கத்துடனும் எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களை அணுகவேண்டும் என்பது குறித்து விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்டது.

இந்த உளவியல் பயிற்சி வழங்கலின் ஊடாக பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அவர்க ளுக்கு அவசியமான உளவியல் சார்ந்த உதவிகளை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வர் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொழும்பு அலுவலகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ)

## பொறுப்பற்ற...

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதா கக் கூறி கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனைக் கவனத்தில் எடுத்த வெளி விவகார பிரதிய மைச்சர் அருண் ஹேமச்சந்திர, குறித்த பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படும் என்று உறுதியளித்துள் ளார். (அ)

## ஒரே...

அதன் மூலம் 61.7 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

பண்டிகைக் காலம் மற்றும் தொடர் விடுமுறை கார ணமாக அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகன நெரிசல் அதிகமாகக் காணப்படுவதால், பயணிகள் அவதானத்து டன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரணில், சஜித் இணைவின் பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் சேரும்

## நம்பிக்கை வெளியிடுகிறார் ரவி கருணாநாயக்க

கொழும்பு, டிசெ. 27

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஒன்றிணைந்த பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அந்த அணியில் இணையும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்படும் முயற்சி தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், "ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுகின்றாரா, நாடாளுமன்றம் வருவாரா என்பது முக்கியம் அல்ல. அவரும் சஜித்தும் இணைந்து செயல்பட வேண்டியதுதான் முக்கியம். அந்த ஒன்றிணைவுக்காகவே நானும் செயல்பட்டு வருகின்றேன். எனினும், அதனை நான் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

அதேபோல சிறு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளேன்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்த பின்னர் ஏனைய சிறு கட்சிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ், முஸ்லிம் கட்சிகளும் எம்முடன் இணையும். அதற்கான சிறப்பான ஆரம்பம் கொழும்பில் வழங்கப்பட்டுள்ளது." - என்றார். (ஐ)

## அமைச்சர் நளிந்தவை சந்தித்த வியட்நாம் நாட்டின் தூதுவர்!



கொழும்பு, டிசெ. 27

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் இலங்கைக்கான வியட்நாம் தூதர் திருமதி டிரிந் தி டாம் ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

வெகுஜன ஊடக அமைச்சில் நடந்த இந்த சந்திப்பில், இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான தற்போதைய இராஜதந்திர உறவுகள் மற்றும் எதிர்காலத்தில் அந்த உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் வியட்நாமின் உதவியுடன் இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போதைப்பொருட்களுடன் 6,641 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 27

போதைப்பொருள் சார் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இந்த ஆண்டில் மட்டும் 6 ஆயிரத்து 641 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 79 இலட்சத்துக்கும் அதிகமானோர் சோதனையிடப்பட்டனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

மேலும், நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 73 ஆயிரத்து 634 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 4 இலட்சத்து 80 ஆயிரத்து 335 சந்தேகநபர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

## கொலை முயற்சியில் ஈடுபட்ட நபர் கைது!

கொழும்பு, டிசெ. 27

கார் ஒன்றிலிருந்து ரி -56 ரக துப்பாக்கி அதற்குரிய 2 மெகஸின்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி காரிலிருந்து துப்பாக்கி மீட்கப்பட்டது. இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

சிறையிலிருந்து விடுதலையான "திக்பிடிகொடகல்ப" என்பவரை கொல்லும் முயற்சிக்காகவே அந்தத் துப்பாக்கியை அவர் கொண்டு வந்திருந்தார் என்று சந்தேகநபர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

அதீத ஐஸ் போதை பாவனையால் குறித்த நபர் கொலையை செய்ய முடியாது போனதால் துப்பாக்கியை காரிலேயே கைவிட்டு, அவர் அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழை

கொழும்பு, டிசெ. 27

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

## பொய்கூறி ஆட்சியை தக்கவைக்க முடியாது

### ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, டிசெ. 27

பொய் வாக்குறுதிகளை அளித்து ஆட்சியை கைப்பற்ற முடியும். ஆனால், பொய் கூறி ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டம் தோல்வியடைந்தமை தொடர்பில் ஆளும் தரப்பினர் தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்களுக்கு நேற்று ஊடகங்களுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கொழும்பு மாநகர சபையின் வரவு - செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் சிலர் என்னை குறை கூறி வருகின்றனர். ஆனால், மாநகர சபையின் மேயர் தெரிவு செய்யும் வாக்களிப்பின்போது இரகசிய வாக்கெடுப்பே இடம்பெற்றது.

பொய் வாக்குறுதிகளை வழங்கியே மாநகர சபை ஆட்சியை பிடித்தனர். ஆனால், பகிரங்க வாக்கெடுப்பொன்றுக்கு சென்றபோது, பொய் வாக்குறுதி வழங்கி பெற்ற அதிகாரத்தைத் தக்க வைத்துகொள்ள முடியாமல் போனது. பொய் கூறி ஆட்சியை கைப்பற்றிக்கொள்ள முடியும். ஆனால் பொய் கூறி ஆட்சியை கொண்டு செல்ல முடியாது என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## இரு கஞ்சா தோட்டங்கள் பொலிஸாரிடம் சிக்கின

கொழும்பு, டிசெ. 27

மொனராகலையில் இரு கஞ்சா தோட்டங்கள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு பெருந்தொகை கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டன.

எத்திமலை - கொட்டியாகலையில் நேற்று முன்தினம் இந்த இரு தோட்டங்களும் பிடிபட்டன.

அரை ஏக்கரில் பயிரிடப்பட்ட 3 ஆயிரத்து 754 கஞ்சா செடிகள், மற்றோர் அரை ஏக்கரில் பயிரிடப்பட்ட 3 ஆயிரத்து 602 கஞ்சா செடிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

இந்த கஞ்சா தோட்டங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)

## ரூ. 3 இலட்சம் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரி கைதானார்

கொழும்பு, டிசெ. 27

கம்பஹா பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத பொருட்கள் கையிருப்பில் வைத்திருந்த நபர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக, மூன்று இலட்சம் ரூபாயை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டிலேயேஅவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மோ. சைக்கிள் பந்தயம் ஏழு இளைஞர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 27

பணத்துக்காக மோட்டார் சைக்கிள் பந்தயம் ஓடிய 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதானவர்கள் மொறட்டுவை, எகொடைஉயன, பாணந்துறை பிரதேசங்களை சேர்ந்த 18 - 22 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

இதன்போது 4 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கடலில் மூழ்கி மருத்துவர் பலி

கொழும்பு, டிசெ. 27

கடலில் நீராடிய மருவத் துவர் அலையில் சிக்குண்டு உயிரிழந்தார்.

மாத்தறை - மிரிஸ்ஸ கட லில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வெலிகம - வலான பிரதேச மருத்துவமனையில் சேவையாற் றிய 49 வயதுடைய தலைமை மருத்துவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மருத்துவர் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது பெரிய அலை ஒன்றில் அகப்பட்டார். அவரை பிரதேச வாசிகள் மீட்டு மாத்தறை பொது மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் அவர் அங்கு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

# புதிய பயங்கரவாத சட்டத்தால் தனிமனித சுதந்திரம் பாதிக்கும்

## முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, டிசெ. 27

நீதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு' சட்டமானால் தனிமனித சுதந்திரம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும். தற்போது வெளியிடப் பட்டுள்ள சட்டவரைவை உயர்நீதி மன்றத்தில் சவாலுக்கு உட்படுத்து வேன் - என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் யுத்த சூழலை கருத்தில் கொண்டு பயங்கரவாத தடைச் சட்டம் தற்காலிக ஏற்பாடாகவே இயற்றப்பட்டது. 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் பயங்கரவாத தடைச் சட்டம் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டது.

ஆட்சியாளர்கள் தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கும் எதிர்கால அரசியலுக்காகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தை தவறாக பயன்படுத்தினார்கள். இதன் பின்னரே பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் எதிர்ப்புகள் எழுந்தன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாக நாங்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். அதற்குரிய நடவடிக்கைகளை வெளிப்படையாக முன்னெடுத்தோம். 2015 முதல் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் இடம்பெறும் வரை பயங்கரவாத தடைச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

நாங்கள் முன்வைத்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் தேசிய மக்கள் சக்தியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு எதிராகவே வாக்களித்தனர் - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.